# <u>பத்திரிகை செய்தி</u>

இன்று 14.10.2020 ஆம் தேதி காலை 11.40 மணி முதல் வேலூர் மண்டல தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.M.பன்னீர்செல்வம் என்பவரின் இராணிப்பேட்டையில் உள்ள வீட்டை சோதனை செய்ததில் தக்க முகாந்திரம் மற்றும் கணக்கு கூற இயலாத பணம் ரூ.3,25,20,000/-, தங்க ஆபரணங்கள மற்றும் தங்க காசுகள் சுமார் 450 சவரனும், வெள்ளி பொருட்களாக சுமார் 6½ கிலோவும் மற்றும் திருவள்ளூர், சென்னை, இராணிப்பேட்டை மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள அசையா சொத்துகள் சம்மந்தமான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.